
With Best Compliments
HEARING AIDS

SIEMENS
Hearing Instruments
Authorised Hearing Care Centre
JAGADISH HEARING AIDS
No.3, Kutchery Road, Mylapore, Chennai-4.
24640968 / 9444851663

# MYLAI EXPRESS

Neighbourhood Newspaper


For online Flute & Vocal Music Classes
Ct: hemflute@gmail.com

Read our PAPER @ www.mylaiexpress.com

Free Circulation

VOL - 7 ISSUE - 33 Office:9840643902/49574279 e-mail: mylaiexpress1@gmail.com Jan 12 - 18, 2018

### SOON CCTV CAMERAS WILL BE INSTALLED AT MYLAPORE FOR SECURITY



According to senior police officer around 40 CCTV cameras will be installed on the Mada streets in Mylapore surrounding Kapaleeswarar temple and adjoining roads. This is mainly to fight crime and to monitor law and order in the area. This is an important area where several people gather and hence we feel it necessary to have the cameras at several spots around the temple. Chain snatching, thefts, and eve teasing are common complaints in Mylapore and the cameras can help detecting the accused said the officer. Similarly we will soon install the cameras near Gandhi statue at Marina beach facing main road and service road said the official.

### TILL OCTOBER DRINKING WATER RESOURCES FOR CITY ADEQUATE

Chennai Metro Water officials said residents in the city need not fear about any water scarcity during this year summer. About 650 million litres a day are being supplied with water sourced from Veeranam lake, desalination plants and city reservoirs. Krishna water too is being released to Poondi reservoir and the same volume of supply will be continued till October said a release.

GIRI presents
MARGAZHI UTSAVAM
with
TYAGARAJAR
Pancharatna Kritis
by
Smt Lakshmi Krishnaswamy
(Skanda Gana Vidyalaya)
January 13 SATURDAY
Time 3 pm onwards
Tiruppavai Pasurangal & Tyagarajar Kritis
by
Keyboard Sathya
Tyagarajar Charitram Nama Sankeertanam
by
Cuddalore Sri Gopi Bhagavatar
Contests Surprizes
All Are Welcome
✆ 7299 32 33 34
An Event by
Lakshmi Giri Charitable Trust
Venue : Chandrasekar Thirumana Mandapam, West Mambalam, Ch- 33.

உ
ஸ்ரீ ராமஜெயம்
ஆஸ்திக ஸமாஜம்
(நைமிசாரண்ய மண்டபம்) 2, வீனஸ் காலனி முதல் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ
ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ
சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
பொற்கரங்களால் அருளாசியுடன்
2018-ம் ஆண்டிற்கான
ஆஸ்திக பிரவசன ரத்னா விருது
வடகுடி பிரம்மஸ்ரீ ராம தீட்சிதர்
அவர்களுக்கு வழங்குகிறார்கள்
* * * *
நாள் : ஜனவரி 18-ந் தேதி வியாழக் கிழமை
நேரம் : மாலை 6.00 மணி விருது விழா
7.00 மணி டாக்டர்.பி.சுந்தரகுமார், மகாபாரதம் உபன்யாஸம்
இடம் : ஆஸ்திக ஸமாஜம், நைமிசாரண்ய மண்டபம்
2, வீனஸ் காலனி முதல் தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018
அனைவரும் வருக.

பொங்கல் நல் வாழ்த்துக்கள்



### CHIEF MINISTER DISTRIBUTED FREE SAREES AND DHOTIS FOR PONGAL

In view of Pongal Festival next week Chief Minister inaugurated on Jan' 4th the distribution of free sarees and dhoti to beneficiaries. About 1.56 lakh dhotis and an equal number of sarees would be distributed to beneficiaries at a total cost of Rs.484 crore said a press release. The Chief Minster also inaugurated the distribution of Pongal gift hamper to beneficiaries on Jan'.5th. about 1.84 crore families with ration cards get the gift hamper comprising of 1kg rice, a kg of sugar, a piece of sugarcane and spices.

EXPRESS COURIER & CARGO
to USA , UK, CANADA ......
We accept Home made / Branded Sweets, Savouries, Pickles, Thokus, Vadams, Appalams, Electronics, Medicines & More
FREE PACKING & GAURANTEED 2-3 WORKING DAYS DELIVERY

SPL RATES FOR BULK BOOKINGS
PLS CALL US 9840386615 / 9940100200 / 9940211044
044 - 43533425 / 48636456

## SHRADHANJALI & BOOK RELEASE FUNCTION





On January 8th B.V.Bhavan & Veda Pata Nidhi Trust paid SHRADHANJALI to Sri Chandrasekherendra Saraswathi Swamigal ( Sage of Kanchi) and also released two books "Thirukkural" An abridgement of Sasthras by Dr.R.Nagaswamy and "Samadarsan" - by Sri Mohan Nagaswamy with the blessings of Swamiji at B.V. Bhavan Main Auditorium Mylapore. His Holiness Sri Vijayendra Saraswathi Swamigal released the book and Sri C.L. Ramakrishnan IPS (Retd) former IGP Tamil Nadu, Thiru Ela Ganesan M.P. Rajya sabha & others received the copy of the edition of both the books from Swamiji Delightfully. Swamiji gave a wonderful 'Anugraha Bhashan' to the devotees gathered in large number at the hall on that day. Both the books are available at all Giri Book Traders outlets.

# CLASSIFIEDS


## PRANAVAMM HOME NEEDS

HOME MADE
APPALAM, VADAM, VATHALS,
PICKLES, PODI & SNACKS
WHOLESALE & RETAIL DEALER

New No.24, Old No.89, Adam Street, Mylapore, Chennai-600 004.

9444102394

## PRYTHIANGARA CATERING

(Pure Vegetarian Brahmins Food)
A to Z (All Functions Catering Work)

**PONGAL SPECIAL LUNCH**
14-01-2018, Sunday Available

**BREAKFAST - LUNCH - DINNER**

Ph:044-2462 1072, 2462 1073
Cell: 99411 27141, 90946 50100 / 72993 32352

## HOME FOOD

Tasty Homely prepared
Bengali Rasagulla and
Chappati, Aloo Parota available
in Mylapore, Chennai.
7am to 8 pm
Party Orders also undertaken

Contact 9962510699
9884727351



# இந்த வார ராசி பலன்




**மேஷம்:** வீரம், விவேகம் அதிகமுள்ள மேஷ ராசி அன்பர்களே, உங்களின் சிறப்பு பிறரிடம் காரியங்களை சாதித்துக் கொள்ள மென்மையாக அணுகாமல், அதிகாரத் தோரணையில் கேட்பீர்கள். தோல்வியை எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள். மற்றவருடன் பேசும் போது சிரித்த முகத்துடன் பேசி வாருங்கள். உங்கள் பிள்ளைகள் சில சாதனைகளைச் செய்து உங்களுக்கு பெருமை சேர்ப்பர். பணம் வந்து கொண்டேயிருக்கும். வாகனம் வாங்கும் அல்லது மாற்ற வேண்டி வரும். இம்மாதம் முருகனை வணங்கி வாருங்கள். நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எண்: 7.




**ரிஷபம்:** நல்ல நண்பர்களை பெற்று அவர்கள் ஆலோசனையை கேட்கும் குணம் கொண்ட உங்களுக்கு பணம் வந்து கொண்டேயிருக்கும். ஆண்டின் தொடக்கம் அற்புத பலன்கள் அள்ளித்தரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் வருகை மகிழ்ச்சியைத் தராது. அவர்களின் அன்புத் தொல்லைக்கு ஆட்பட நேரும். மருத்துவ செலவால் பணச் சுமை கூடும்./ பணவரவு வந்தாலும் வந்த மறு நிமிடமே செலவாகும். சுப செலவுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நல்ல வாய்ப்புகள் ஏற்பட பிரதோஷ வழிபாடு வழி வகுக்கும். அதிர்ஷ்டஎண்: 2, நிறம்: வெளிர் நீலம், தெய்வம்: பிரதோஷ நாயகன் (சிவபெருமான்)



**சிம்மம்:** தலைமை தாங்கும் எண்ணங்கள் மேலோங்கி நிற்கும் குணம் கொண்ட உங்களுக்கு நீண்ட தூர பயணம் ஏற்படும். பிடிவாதங்களை குறைத்துக் கொள்ளவும்./ விலகிச் சென்ற உறவினர்கள் உங்கள் தயவை நாடி வருவர். தொழிலில் இருந்த மந்த நிலை மாறும். வராது இருந்த பணம் வந்து சேரும். விரயம் வந்தாலும் பணம் வந்து சேரும்/ வயிறு உபாதை ஏற்படும். தாயின் அன்பும், ஆசியும் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். நீங்கள் முயற்சி எடுக்காமலேயே சில காரியங்கள் வெற்றியைத் தேடித் தரும். அதிர்ஷ்ட எண்: 8, நிறம்: ஆரஞ்சு, தெய்வம்: குருபகவான்.



**கடகம்:** பொறுப்பை ஏற்று திறம்பட முடித்து கொடுக்கும் குணம் கொண்ட உங்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும் பொன்னான மாதமிது. வரவு வந்தாலும் கூடவே செலவுகளும் இருக்கும். இடமாற்றம், ஊர் மாற்றம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இலாகா மாற்றம், புதிய உத்தியோக மாற்றமும் ஏற்படலாம். பதவியில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் கூடும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் அன்னதானம் செய்யுங்கள். பெண்கள்: தகுதிக்க மீறிய வகையில் பணம் செலவாகும். மாணவர்கள்: படிப்புக்கான பணவரவு தாமதப்படும். சக மாணவர்களிடம் பழகுவதில் எச்சரிக்கை தேவை. அதிர்ஷ்ட எண்: 3, நிறம்: வயலட், தெய்வம்: துர்க்கை, விநாயகர்.



**மிதுனம்:** மற்றவர்களை பேச்சால் கவர்ந்து அவர்களது மனதை கவரும் உங்களுக்கு தொல்லை தந்த எதிரிகள் விலகி நிற்பர். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொலைபேசி தகவல் நல்ல செய்தியை கொண்டு வரும். வாழ்க்கை பாதை சீராக அமையும். பெண்கள்: வேலை பார்க்கும் பெண்களுக்கு பணி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். பிறருக்கு ஜாமீன் கொடுப்பதையும், பணம் கடன் கொடுப்பதையும் தவிர்க்கவும். மாணவர்கள்: பெற்றோர் அன்பு, பாச மழையில் நனைவீர்கள். சக மாணவர்கள் நட்புடன் பழகுவார்கள். உயர்ந்த தேர்ச்சி பெறலாம். அதிர்ஷ்ட எண்:6, நிறம்: பச்சை, வணங்கவேண்டிய தெய்வம்: ஏழுமலையான்.



**கன்னி:** யோசனைகள் கேட்டாலும் முடிவில் உங்கள் விருப்பப்படியே நடக்கும் குணம் கொண்ட உங்களுக்கு இந்த மாதம் பணம் பற்றாக்குறை இருக்காது. எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். விற்காத சொத்துக்கள் நல்ல விலைக்கு விற்க வேண்டி வரும். தாய்வழி ஆதரவில் மனம் நிம்மதியையும், பெரிய மனிதர்களின் தொடர்பு மனத் தெளிவை கொடுக்கும். பெண்கள்: கணவரின் அன்பால் நல்ல பணவசதியும், ஆடை, ஆபரணமும் கிடைக்கும். மாணவர்கள்: விருது வாங்கும் அளவிற்கு அதிர்ஷ்டம் உண்டாகும். அதிர்ஷ்ட எண்: 5, நிறம்: ரோஸ். தெய்வம்: நவகிரகத்தை 9 சுற்றுகள் சுற்றி வழிபடவும்.



**கும்பம்:** எந்த காரியத்தை எப்படி செய்தால் வெற்றி பெறலாம் என்பதை தெரிந்து கொண்டு செயல்படும். குணம் கொண்ட உங்களுக்கு குடும்ப சுமை குறையும். பிள்ளைகளின் எதிர்காலம் கருதி நீங்கள் எடுக்கும் முடிவு செலவை உண்டு பண்ணும். பெண்கள வருவாய்க்கேற்ப செலவினங்களை கட்டுபடுத்தவும். மாணவர்கள்: பணச்செலவில் சிக்கனத்தை கையாள்வது மூலம் பணத் தேவையை பூர்த்தி செய்யலாம். பெற்றோரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தவும். கல்விச் சுற்றுலா ஏற்படும். அதிர்ஷ்ட எண்:9, நிறம்:சாம்பல் நிறம், தெய்வம்: இராகு, கேதுவுக்கு அர்ச்சனை செய்து வழிபடவும்.



**விருச்சிகம்:** எல்லாம் தெரிந்தும் தெய்வ நம்பிக்கை மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்து கொள்ளும் உங்களுக்கு வருமானம் திருப்தியை கொடுக்கும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி உங்களுக்கு மிக ஏற்றமாக உள்ளது. இதயம் மகிழும் நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடக்கும். இனிய காரியங்கள் ஏராளமாக செய்ய போகிறீர்கள். புகழ், கீர்த்தி எதிலும் கிடைக்கும். கணவன் / மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். மாணவர்கள்: தேவையற்ற பயணத்தை தவிர்க்கவும். படிப்புக்கான பணவசதி கேட்ட இடத்திலிருந்து கிடைக்கும். உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது. அதிர்ஷ்ட எண்: 6, நிறம்: பச்சை, தெய்வம்: அனுமான்.



**தனுசு:** நட்பில் உயர்வும், நடத்தையில் நேர்மையும் கொண்ட உங்களுக்கு பகல் இரவாக சிரமப்பட்டதற்கு நல்ல பலன் கிடைக்கும் மாதமிது. பழைய கடன்கள் வசூலாகும். உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர். உங்களோடு இணைந்து செயல்பட்டவர்கள் உங்களை மறக்காது உங்கள் பின்னால் நிற்பார்கள். தெய்வ திருப்பணிகளில் அதிக ஆர்வம் ஏற்படும். ஆடம்பர பொருட்கள் வாங்குவது மூலம் குடும்ப உறுப்பினர்களை மகிழ்ச்சி படுத்துவீர்கள். உங்களின் தனிப்பட்ட இரகசியங்களை பாதுகாக்கவும். அதிர்ஷ்ட எண்:5, நிறம்: மஞ்சள், பெருமாளை வழிபடுவது மூலம் சிறப்புகள் பெறலாம்.



**மகரம்:** நிதானம் வெற்றியைத் தரும் அதை செயல்படுத்தி வெற்றியை பெறும் உங்களுக்கு அலைச்சல் அதிகமாக இருந்தாலும் அதற்கேற்ப ஆதாயமும் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் தொல்லைகள் விலகும். சீராக வாழ்க்கை பாதை அமையும். வரும் மாற்றங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள உதவும். மாற்று இனத்தவர்கள் உதவி புரிவர். உங்கள் சாதுர்ய பேச்சால் சாதிக்க முடியும். பல்வலி, கண் எரிச்சல் வந்து சரியாகும். மகளின் திருமணப் பேச்சு இனிதே நடந்தேறும். பூர்வீக சொத்து பிரச்சனை தீரும். அதிர்ஷ்ட எண்: 5, நிறம்: ரோஸ். தெய்வம்: அனுமனை சுற்றி வழிபடவும்.



**துலாம்:** முன்னேற்றம் மட்டுமே குறிக்கோளாக கொண்ட உங்களுக்கு நீண்ட நாட்களாக இருந்த மனக்கலக்கம் அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றம் மகிழ்ச்சி கொடுக்கும். மனதில் இனம் புரியாத பயம் இருந்து கொண்டேயிருக்கும். கணவன் / மனைவியிடம் பாசமும், நேசமும் கூடும். பெற்றோர்களின் மணிவிழா, முத்துவிழா போன்ற விழாக்களில் கலந்து கொள்ள வேண்டி வரும். எதிர்கால திட்டத்திற்கு பணம் சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பெற்றோர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். அதிர்ஷ்ட எண்: 9, நிறம்: கருநீலம், தெய்வம்: ஜீவசமாதியை சென்று தியானம் செய்யுங்கள்.



**மீனம்:** இனிமையாக பழகும் குணம் கொண்ட உங்களுக்கு யோகங்கள் வந்து சேரும் மாதமிது. பொருளாதாரம் உயர்வைக் கொடுக்கும். தெரியாத தொழிலில் ஈடுபட்டால் கூட அதிலும் லாபம் உண்டாகும். பகைவர்கள் உங்களை நாடி வருவார்கள். துணிந்து ஈடுபடும் காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணம் நிம்மதியைத் தரும். பெண்கள்: உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை தேவை. ஆடை ஆபரண சேர்க்கை மகிழ்ச்சியைத் தரும். மாணவர்கள்: உடல் நலத்தால் உள்ளம் மகிழ்ச்சியுறும். படிப்புக்கான பணவசதி எளிதில் கிடைக்கும். அதிர்ஷ்ட எண்: 9, நிறம் : நீலம், தெய்வம்: முருகன்.

# Events of this week........

## திருவள்ளுவர் இசை விழா

தைப்பொங்கல் பெருவிழாவை முன்னிட்டு மங்கள இசைக் கலைஞர்கள நலச்சங்கம் சார்பில் வருகிற ஜனவரி 15, திங்கட்கிழமை அய்யன் திருவள்ளுவர் தினத்தன்று உலகப் பொதுமறையாம் திருக்குறளைப் போற்றும் வகையில் திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிப்பிடும் வகையில் 133 நாதஸ்வர மற்றும் 133 தவில் விற்பன்னர்கள் கலந்து கொள்ளும் நாதசங்கமம். **திரு.ஆர்.ராஜேஷ்,** ஆசிரியர் சிகப்பு நாடா மாத இதழ், எக்ஸ்பிரஸ் வேளச்சேரி வார இதழ் தலைமையில் நடைபெறுகிறது. திருவள்ளுவர் இசை விழாக் குழுத் தலைவர், சங்கத்தின் சட்ட ஆலோசகர் மகாகவி பாரதியார் மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் புரட்சி பாரதி உயர்திரு **மயிலை எஸ்.சத்யா** அவர்கள் விழாவைத் துவக்கி வைக்கிறார்.

**நிகழ்ச்சி நடைபெறும் இடம் : ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் பேயாழ்வார் தேவஸ்தானம், மைலாப்பூர், சென்னை-4. (சித்ரகுளம் அருகில்)**
**நேரம் : மாலை 3.30 மணி.**

## BHARATHANATYAM

Bharathanatyam Solo presentation by Keerthana Subramanian on 13th January @ 4pm under auspicous of The Mylapore Fine Arts Club.

**Venue : MFAC, 45, Musiri Subramaniam Salai, Mylapore.**




ஸ்ரீ ராமஜெயம்

**ஆஸ்திக ஸமாஜம்**
**(நைமிசாரண்ய மண்டபம்)**

2, வீனஸ் காலனி முதல் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
போன்:2435 2242 இ-மெயில்:asthikasamajam.venus@gmail.com

*மாலை 6.30 முதல் 8.30 மணி வரை நடைபெறும்*

**உபன்யாஸ விபரம்**

| தேதி | நிகழ்த்துபவர் | தலைப்பு |
|---|---|---|
| 18.01.2018 to 31.01.2018 | டாக்டர் பி.சுந்தர்குமார் | மகாபாரதம் (தொடர்ச்சி) |
| 01.02.2018 to 05.02.2018 | டாக்டர் சுதா சேஷையன் | பின்னர் அறிவிக்கப்படும் |
| 06.02.2018 | நன்னிலம் ஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் | தர்ம சாஸ்திரங்கள் |
| 07.02.2018 | | ச்ருதியும் / ஸ்ம்ருதியும் |
| 08.02.2018 | | சங்க / லிகித ஸ்ம்ருதி |
| 09.02.2018 | | ஹாரீத ஸ்ம்ருதி |
| 10.02.2018 | | பாராசர ஸ்ம்ருதி |
| 11.02.2018 | | மனு ஸ்ம்ருதி |
| 12.02.2018 | | கௌதம ஸ்ம்ருதி |
| 13.02.2018 | | யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதி |
| 14.02.2018 | ஸ்வாமி பரமார்த்தானந்தா | மஹா சிவராத்திரி |
| 15.02.2018 | ஸ்ரீ அனந்தநாராயண பாகவதர் | சிவநாம சங்கீர்த்தனம் |
| 16.02.2018 to 19.02.2018 | ஸ்ரீ அனந்த பத்மநாபாசாரியார் | ஹயக்ரீவ வைபவம் Sponsoreed by : Lions Club of Madras East |

**அனைவரும் வருக**

ஸ்ரீ.ஜி.சீதாராமன்
தலைவர் (94440 81583)

ஸ்ரீ.எஸ்.வெங்கடேஸ்வரன் (94440 32191)
ஸ்ரீ.எஸ்.பாலாஜி (94440 43538)
செயலாளர்கள்

ஸ்ரீ.என்.ஜெயசந்திரன்
ஸ்ரீ. மோகன் ஸ்ரீநிவாஸ்
உபதலைவர்கள்

ஸ்ரீ.பி.ராமகிருஷ்ணன்
பொருளாளர் (93802 84435)



Our Office Address:
No.20/45, Alamelumangapuram,
Mylapore, Chennai - 600 004.
PH: 044-49574279
Email: mylaiexpress1@gmail.com
Website : www.mylaiexpress.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Mylai Express does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Mylai Express shall not be held responsible / liable for any consequence, in case such claim.

FOR ADVERTISEMENT IN MYLAI EXPRESS CONTACT
9840643902
9884944452




பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மயிலை மாடவீதிகளில் இஞ்சி, மஞ்சள்கொத்து மற்றும் கரும்பு வியாபாரம் அமோகம்.

# NEWS

### CHENNAI BOOK FAIR INAUGURATED ON JANUARY 10TH

The 41st Chennai Book Fair was inaugurated by the School Education Minister K.A.Sengottiyan on January 10th at the St.George Anglo Indian High School Grounds. Book sellers' and publishers' Association of South India (BAPASI) organised the event said that 376 participants spread across 428 stalls at the Fair. This year organisers recommend patrons alight at metro station adjacent the college for better access to the fair. The Fair will be open from 11a.m to 9p.m on holidays and from 2p.m on working days. Tickets are priced at Rs 10 and five lakh tickets are being distributed to school students to encourage them to visit. All the books at the Fair will be entitled to 10% discount. The Fair also have the presence of Bhaviyshya a robot that has been placed at stall near the entrance of the Fair which can identify specific stalls and books for visitors. The book fair will be on till January 22nd.

### NEW RS10 NOTE IN CHOCOLATE BROWN COLOR TO BE RELEASED SOON

On January 5th The RBI said " A new chocolate brown coloured Rs10 denomination currency will be put into circulation for public". The new note has the motif of Suntemple, Konarak on the reverse , depicting the country's cultural heritage. The size of the new note will be 63cmX 123mm smaller than the existing note. "All the banknotes in the denomination of Rs10 issued earlier in the series will continue to be legal tender" said RBI

### NEW MEDICAL COLLEGES TO BE OPENED IN 2018-19

For the academic year of 2018-19 the government has received applications for establishing 85 new Medical colleges. A look at the State –wide location of the present established both private and government Medical colleges number is 479 as of January 1,2018. In the south States Tamil Nadu has 49 Medical colleges, while Karnataka has 57. Maharashtra and Delhi has 50 and 8 medical colleges respectively.

### CINEMA HALLS MADE OPTIONAL FOR PLAYING NATIONAL ANTHEM BEFORE EVERY SHOW

On January 9th the supreme court modified its interim order of November 2016 and made it optional for cinema halls to play 52 seconds national anthem before every show. A bench led by Chief Justice of India Dipak Misra clarified that it is not mandatory to play the anthem before screening of cinemas at the hall. The court left to the choice of individual cinema hall owners in this matter. However if anthem is played patrons were bound to stand up in respect.

### EXTENDED SERVICE BY METRO RAIL FOR PONGAL HOLIDAYS

Chennai Metro Rail services has increased the number of trains on account of Pongal for three days. On January , 12, 13 and 16th Metro will run services upto 11.30pm says a press release.

### ஸ்மார்ட் கார்டு விநியோகம்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒரு கோடியே 94 லட்சம் குடும்பங்களில், இதுவரை ஒரு கோடியே 88 லட்சம் குடும்பங்களுக்கு ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உதவித் தொகையின் உச்ச வரம்பு, ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரமாக உயர்த்துவதாக கவர்னர் பன்வரிலால் புரோகித் தெரிவித்துள்ளார்.


**SPOKEN ENGLISH**

❖ தமிழ் மூலமாக அடிப்படையிலிருந்து Spoken English கற்றுத் தரப்படும்.
❖ Advanced Level Spoken English for great fluency.

For School Students separate class is available

HAPPY PONGAL

Also Spoken Hindi from Basic

+3 Excellent Spoken English

29/16, Madhava Perumal Koil St., Mylapore, Chennai - 4. (காரணீஸ்வரர் கோவில் அருகில்)

SIVAKUMAR 98843 82450

# DELIGHTFUL BHARATHAM BY DR. TEJASWINI NARAYANAN









The Bharathanatyam performance by Dr. Tejaswini Narayanan (disciple of Guru Smt. Sudha Vijayakumar)under the auspices of Mylapore Fine Arts at their premises, on January 9th, was a delight to watch. The dancer started the evening with a Ganesha Vandanam in Hamsadhwani, followed by an endearingTulsi Das Bhajan on Lord Sri Rama. The central piece of the evening was a beautiful Daru Varnam in Khamas which was aptly choreographed by Dr. Sujatha Mohan, giving a lot of scope for the dancer to exhibit commendable Nritha and Nrithya skills. Tejaswini's bhavam was impeccable, be it while presenting Goddess Meenakshi's birth, or the Shumbha-Nishumbha Mardanam. The clean mudras, the stage presence and coverage showed the prowess of Tejaswini in the field of dance. The dancer's true involvement in the dance, the aptly colourful costume and the selection of the songs for the Dance Festival, added more glory to the entire performance. The dancer concluded her recital with a Javali and a brisk Thillana. The MFAC secretary honoured the dancer with a merit certificate and a mement. Dr.Tejaswini has been learning Bharathanatyam from the age of 4 and performed her Arangetram under Guru Smt. Sudha Vijayakumar in the year 1999. To her credit she performed for three consecutive years at VDS Arts Academy and was adjudged the Best Dancer in 2001 and 2003. She is also a recipient of the prestigious Bharat Kalachar Scholarship and was awarded the "ILAM NATYAMANI" title by Kali Bari temple in Chennai. She has also performed in many temples and Sabhas in India and USA. She is also learning Kathak from direct disciples of Nrithya Shironmani Guru Bandana Sen, and kathak maestro Pandit Shri Birju Maharaj Ji. Dr. Tejaswini holds a PhD in Electrical Engineering from University of California, San Diego.





## MYLAPORE FESTIVAL 2018



A glance of Kolams for the competition of Mylapore Annual Festival



TT Srinivasaraghavan, MD, Sundaram Finance presenting the 10th Annual **SPIRIT OF MYLAPORE** Award to the owners of Giri Trading Agency.



**NAADA INBAM** - Vocal concert by Varalakshmi Anandkumar & Party on 6th January @ Ragasudha Hall, Luz, Mylapore.



**MARGAZHI UTSAV - RA PURAM BHAKTHA JANA SABHA** - Vocal concert by Hosur Mahanya & Party on 9th January @ Sringeri Pravachana Mandram, RAPuram.

# MARVELOUS MRIDANGAM ARANGETRAM BY SRIHARI S. RAMAN






The Mridanga Arangetram of Master SRIHARI RAMAN disciple of Acharya Rathnakara Sri Tiruvarur Vaidyanathan at Tatvaloka Audtotium Teynampet on January 7th is really Marvelous. His Arangetram was done in the most sought after carnatic vocalist Sri Sandeep Narayanan music concert. Sriram played Mirangam (Arangtetram) along with the Sri B.V.Ragavendra Rao, on violin, Sri N.Guru Prasad on Ghatam and Sri N.Sundar on Morsing wonderfully. Though the others played are famous and veteran Artists Srihari Raman is only the Arangetram Artist on that day but played Spectacularly like a Veteran for the entire concert. On the 'Thani Avardhanam' Sri Hari Raman exhibited all the skills learnt from his guru sincerely and brought MAGUDAM to his gurus merit of teaching in shaping him well to play in the arangetram with cheer and without fear on the big stage where hall full of audience gathered on that day. The audience were really thrilled by his superb performance which they acknowledged with thundering clapse at the end of each song on that day. Kalaimamani Smt. Sudha Ragunathan was the Chief guest for the function and Kalaimamani Sri A.K.Palanivel, Clevland V.V.Sundaram and Dr.Udayalur Kalyanaraman were the guest of honour for the function. The Chief Guest Smt Sudha Ragunathan and other VIPs on the stage praised the Excellent talent of Srihari Raman wished the child and also the merit of the guru Tiruvarur Sri Vaidyanathan in shaping such a nice disciple into a beautiful Mridangam artist. Incidentally Udayalur.K. Kalyanaraman is Master Srihari Raman's uncle and Srihari is learning mridangam from his age of 4 under Dr.Sriram Balasubramanian. From the age of 9 he is learning under the guru Sri Tiruvarur Vaidyanathan creditably. Guru said with a warm wish "Srihari Raman has been my student for over 5 years and has seen him grow eager child to a well-rounded performer in today's Arangetram. His hands while playing Mridangam speak magic and convey the message sheer brilliance and feel proud to be his guru and pray Almighty to guide him to greater heights in the future Galaxy of Carnatic Music". Master Srihari Raman won the title of SANGEETHA BALA SAMRAAT in 2015 conducted in collaboration with Sankara TV. He has won numerous awards in competitions hosted by CMANA, Clevland Thyagaraja Aradhana. Sangeeth Samaraat and more to his credit. Guru Thiruvarur Sri. Vaidyanathan: He was awarded as "A-TOP" grade artists by All India radio, and also been bestowed many awards like ' Vani kala Sudhakara' in 2017,' Laya Vaadya Samraat' by Sri.Pushpaka endowment in 2012, and' Asthika Vidwan' in Kanchi Kamokoti peedam 2009 onwards to name a few. At present he heads a Trust named as TIRUVARUR TALA VADYA VIDYALAYA in Chennai which provides opportunities to many young talents in India and abroad to showcase their abilities in a day-long events in Chennai regularly and during the December Music season especially. For Information Contact : Mr.Baskar, 9941167862.








**SNAPSHOTS OF BRAHMA GANA DANCE FEST** - 1. Mohini aatam by Gopika Varma on 2nd January 2. Bharathanatyam by Madurya Srikrishnan Disciple of Dr.Vaijayanthi Mala Bali on 6th January @ Smt Sivagami Petatchi Auditorioum, Mylapore.



**ASTHIKA SAMAJAM SRI THYGARAJA ARADANA MUSIC FESTIVAL** - Vocal concert by Akkarai Sisters & Party on January 6 @ Asthika Samajam, Venus Colony, Alwarpet.

# ராமாயணத்தில் யார் தியாகி ?



சென்ற வாரத் தொடர்ச்சி......

தன் உணர்ச்சிகளை எல்லாம் கொன்றுவிட்டு, அவனுடன் உரையாடிய ஊர்மிளை, கணவன் லக்ஷ்மணனின் தலை மறைந்ததும் விக்கி விக்கி அழுதாள். கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கினாள். ராமனுக்கும் சீதைக்கும் 14 ஆண்டுகள் பணிவிடை செய்யப்போகும் லக்ஷ்மணனுக்குத் தன்னைப் பற்றிய ஆசாபாசங்கள், காதல் நினைவுகள் ஏற்பட்டு, அதனால் அவர் செய்கின்ற பணிக்கு இடையூறு வராமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே அவள் இப்படியொரு நாடகமாடி, தன் மீது அவனுக்கு முழு வெறுப்பு ஏற்படும்படியாகச் செய்துகொண்டு, கணவன் ஏற்றுக்கொண்ட கடமை எனும் யாகத் தீயில் தன்னையே நெய்யாக்கி ஆஹூதி தந்தாள் ஊர்மிளை. 14 வருடங்கள் அன்ன ஆகாரமின்றி மிக எளிமையாக, சன்யாசினியாக வாழ்ந்தாள். தான் செய்த இந்த தியாகத்தைப் பற்றி அவள் யாரிடமும் கூறவில்லை. லக்ஷ்மணனுக்கும் ஊர்மிளை செய்த இந்தத் தியாகம் தெரியாது வனவாசம் முடிந்து ராமன் அயோத்தி திரும்பி பட்டாபிஷேகம் செய்துகொண்டான். அப்போதும் லக்ஷ்மணன் ஊர்மிளையை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

இவர்களுக்குள் உள்ள மனபேதத்தை ஊகித்தறிந்த சீதாதேவி, ஒருநாள் ஊர்மிளையை அழைத்துக் காரணம் கேட்டாள். அப்போதும் ஊர்மிளை சொல்ல மறுத்தாள். சீதா மிகவும் வற்புறுத்த, தான் செய்த செயலையும், அதற்கான காரணத்தையும் விளக்கினாள் ஊர்மிளை. சீதை பிரமித்து நின்றாள். ''ஊர்மிளா! ஆயிரம் சீதைகளும் உனக்கு ஈடாகமாட்டார்கள். விரைவிலேயே நான் லக்ஷ்மணனிடம் நடந்ததையெல்லாம் எடுத்துக்கூறி, உங்கள் இருவரின் பிரிவுத் துயரைத் துடைக்க வழி செய்கிறேன்' என்றாள் சீதா. இதற்கான தருணத்தை சீதை எதிர்நோக்கியிருந்தாள். அப்போதுதான் ஸ்ரீராமன், கர்ப்பிணியான சீதையை காட்டுக்கு அழைத்துச் சென்று வால்மீகி ஆஸ்ரமத்தில் விட்டு வருமாறு லக்ஷ்மணனுக்குக் கட்டளையிட்டான். இந்தத் தகவலை சீதைக்குத் தெரிவிக்காமல் மனசுக்குள் புழுங்கியபடி, கண்ணீரோடு லக்ஷ்மணன் தேரைச் செலுத்திக் கொண்டிருந்த வேளையில்தான் அவனிடம் ஊர்மிளையின் தியாகத்தை எடுத்துக் கூறி, அவளை ஏற்றுக் கொள்ளும்படி சொன்னாள் சீதை. ஒரு பக்கம் துயரமும், மறுபக்கம் ஊர்மிளை பற்றிப் பெருமிதமும் கொண்ட லக்ஷ்மணன், ''அண்ணி! எனக்கொரு நல்ல செய்தியைச் சொன்னீர்கள். அதற்காக நன்றி! ஆனால், இந்தப் பாவி உங்களுக்கொரு அதிர்ச்சியான செய்தியைச் சொல்ல வேண்டிய நிலையில் உள்ளேன். என் அண்ணனின் ஆணைப்படி, தங்களை இந்தக் கானகத்திலேயே விட்டுச் செல்ல வந்திருக்கிறேன். என்னை மன்னியுங்கள்!'' என்று கூறி, கதறி அழுதான்.

அப்போது சீதை அதிர்ச்சியில் மனமுடைந்து சொன்னாள்... ''லட்சுமணா! ஸ்ரீராமன் எதுசெய்தாலும் அதில் ஒருதர்மம்இருக்கும்; ஒருநியாயம் இருக்கும். அயோத்தியின் ஒரு பிரஜைக்கு நியாயம் வழங்க, எனக்கு இந்த இரண்டாவது வனவாசம் தந்திருக்கிறார். பரவாயில்லை; ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு வேண்டு கோள்; எக்காரணம் கொண்டும் எந்தக் காலத்திலும் உன் மனைவி ஊர்மிளைக்கு இதுபோல் தண்டனை எதுவும் தந்துவிடாதே! தர்மம் அதை ஒருக்காலும் தாங்காது!'' பாவம் லக்ஷ்மணன்! தாங்க முடியாத துயரத்துடன் அயோத்தி வந்தவன், நேராக ஊர்மிளையைச் சந்தித்து, அவள் தன் மனைவி என்றும் பாராமல்அவள் கால்களில் தடாலென விழுந்துஅவள் பாதங்களை கண்ணீரால் கழுவினான். ராமன் இருக்குமிடமே அயோத்தி என்று கணவனின் திருவடிகளைப் பின்பற்றிக் கானகம் சென்று, பல துயரங்களை அனுபவித்து, பின்பு அக்னிப்பிரவேசம் செய்யவும் தயாரான சீதை தியாகியா? தாய் பெற்றுத் தந்த ராஜ்ஜியத்தைத் துச்சமாக மதித்து, தனயன் திருவடிகளைத் தாங்கும் பாதுகைகளை சிம்மாசனத்தில் வைத்து பூஜித்து, அயோத்தியின் சேவகனாக 14 ஆண்டுகள்வாழ்ந்த பரதன் தியாகியா? அரச போகம் அனைத்தையும் துறந்து, அண்ணன் ராமனுக்குச் சேவை செய்ய 14 ஆண்டுகள் இமைக்காமல், கானகத்தில் தொண்டுசெய்த லக்ஷ்மணன்தியாகியா? இவர்கள் அனைவரும் தியாகிகள் என்றால், கணவன் ஏற்றுக்கொண்ட தியாகப் பணி தடையின்றி நடக்க, தன்னையே அவன் வெறுத்து ஒதுக்கும் சூழ்நிலையை உருவாக்கி, அந்தத் துயரத்தைத் தன்னுள்ளேயே புதைத்துக்கொண்டு, 14 ஆண்டுகள் ஊண் உறக்கமின்றி அரண்மனைக்கு உள்ளேயே அக்ஞாதவாசம் செய்து வாழ்ந்த ஊர்மிளையும் இவர்களுக்கு ஈடான தியாகிதான், அல்லவா? - முற்றும்.

All kinds of
POOJAS, HOMAMS
performed in most
religious way
at your home.
SHRARTHAM CEREMONY
also performed
at our / your place.
Contact :
S.GANAPATHI RAMA SASTRIGAL
Mob: 94444 69174
Address: No.12, T.P.Scheme Road,
Raja Street Extension, Mandaveli,
Chennai - 600 028. (Near BSNL)

# காஞ்சி மகானின் மகிமைகள்



அன்று நடந்தது!! அர்த்தமுள்ளது!!

ஒரு சோம்பலான மதியம் மூன்றரை மணி!! அதாவது மதியத்தின் முடிவு--மாலைப் பொழுதின் ஆரம்பம் என்ற இரண்டுங்கெட்டான் பொழுது காஞ்சி சங்கரமடத்தின் முன் அந்தக் கார் வந்து நிற்கிறது!! காரிலிருந்து இறங்குபவரைப் பார்த்ததும் மடம் -தீ பிடித்துக் கொண்டதைப் போல் ஆகிறது.

ஆம்!! காரிலிருந்து இறங்குபவர் அன்றைய முதல்வர் எம்,ஜி,ஆர்!! எந்தவித முன் அறிவிப்பும் இல்லை? அவர் வருகிறார் என்ற செய்தியும் இல்லை மடத்தைச் சேர்ந்தவர்கள் அங்கும் இங்குமாக அலை பாய்கிறார்கள்? காரணம் அன்றைய மடாதிபதியான மஹா பெரியவர் அந்த சமயம் மடத்தில் இல்லை!! முதல்வர் என்றால் முறைப்படி பூரண கும்ப மரியாதை செலுத்தி வரவழைக்க வேண்டும்? மடத்தில் உள்ளவர்களின் மருட்சியைப் பார்த்து பொன் மனம் கேட்கிறார்! ஏன் இந்தப் பரபரப்பு?? அவரிடம் தயங்கியபடியே விபரம் சொல்லப் படுகிறது! மகா பெரியவர் மூன்று கி மீ தூரத்தில் ஒரு குடிலில் தியானத்தில் இருக்கிறார்?? இவ்வளவு தானே?? அங்கே போய் அவரை தரிசித்துக் கொள்கிறேன்?? பதட்டமில்லாத பண்பட்ட வார்த்தைகளை உதிர்த்து விட்டு மீண்டும் காரில் ஏறிக் கொள்கிறார் மக்கள் திலகம்

மஹா பெரியவர் தங்கியிருந்த குடில் ஒரு குறுகிய சந்தில் இருந்ததால் காரிலிருந்து இறங்கியவர் எந்தவித பந்தாவும் இல்லாமல் செல்கிறார் குடிலை நோக்கி நம் மனதிலோ பிரமிப்பில் நெடிலை நோக்கி இப்படி வருத்தப் படுகிறது முதல்வரை வரவேற்ற அந்த முதிர்ந்த கனி? உன்னை உட்கார சொல்ல ஒரு இருக்கை கூட இங்கில்லை? அதனால் என்ன? இங்கே இந்த மடத்துக்கு நீங்கள் தானே முதல்வர்!! என்றபடி அவர்க்கு எதிரே மண் தரையில் உட்காருகிறார் இதயக்கனி இங்கே ஒரு விஷயம் சிலர் அறிந்திருக்க நியாயம் இல்லை, தன் மனதுக்கு மிகவும் பிரியப்பட்ட ஒரு சிலரைத்தான் மஹா பெரியவர் ஒருமையில் அழைப்பார்கள்!! அந்த ஒரு சிலரில் எம்,ஜி,ஆரும் ஒருவர்.

ஆசி வழங்கிய பின் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் அந்த அருள் ஞானி!! நம்ம மனுஷா முருகனோட அறுபடை வீடுகள் பழனி, திருச்செந்தூர் திருத்தணி என்று ஒவ்வொன்றுக்கும் தனித் தனியா போகவேண்டியிருக்கு!! அதுக்கு தேக சிரமம், கால விரயம் பணச் செலவுன்னு ஆகறது!! ஆறுபடை வீடுகளையும் ஒரே இடத்துல பிரதிஷ்டை பண்ணும்படியா உன் ராஜ்யத்துல ஒரு இடம் கொடுத்தாய் என்றால் ரொம்ப நன்றாக இருக்கும்!! இவ்வளவு தானே?? இந்த சின்ன விஷயத்துக்கா என்னைக் கூப்பிட்டிங்க?? ஒரு ஃபோன் பண்ணி சொல்லியிருந்தா கூடப் போதுமே?? நம் நெஞ்சமெனும் மடத்தில் இன்றும் தங்கற இந்த மடாதிபதி--அந்த சங்கர மடாதிபதியிடம் கனிவாகக் கேட்க உன்னை நேரில் பார்க்கணும்ன்னு ஆசை?? என்று பதில் தருகிறார் எதிலும் ஆசை வைக்காத அந்த முனிவர்??? நீ எங்கே எப்போ எத்தனை மணிக்குப் போனாலும் ஜனங்க உன்னைப் பார்க்க ஆசையோட சூழ்ந்துக்கறா!! அதனால தான் இந்த இடத்துக்கு உன்ன வரச் செஞ்சேன்!! அங்கப் பாரு அதற்குள் உன்னைப் பார்க்க ஜனம் திரண்டுடுத்து!! நீ கிளம்பு என்று அன்புடன் விடை தருகிறார் அந்த ஆன்மிக அருங்கனி! இப்படியாக உருவானது தான் சென்னை பெஸன்ட் நகரில் உருவாகியுள்ள முருகன் அறுபடை வீடு கோயில்! எம்,ஜி,ஆர்,அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபோது யாராலும் விலைக்கு வாங்கப்பட முடியாத யாருக்கும் தனியாக பிரார்த்தனை செய்யும் பழக்கம் இல்லாத அந்தப் பெரியவர் எம்,ஜி,ஆர் ஒருவருக்காக மட்டுமே அவர் நலம் பெற வேண்டி பிரத்யேக பூஜை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது? அருட்காட்சியும் அரசாட்சியும் அருமையாக அமைந்து விட்டால் அரசனும் ஆண்டவனும் ஒன்றே என்பது நமக்கு விளங்குகிறது அல்லவா நன்றே????

## இப்படியும் ஒரு மனைவி இருந்திருக்கிறாளா..?

பல நூறு ஆண்டுகளுக்கு முன்... ஒரு புலவரின் மனைவி... இறக்கும் தருவாயில் தன் கணவனை அருகே அழைத்தாளாம். என்னவென்று கேட்டு கலங்கிய கண்களோடு கணவன் அவள் பக்கத்தில் வர...மனைவி தயக்கத்துடன் இப்படிக் கேட்டாளாம். ''என் உயிர் எப்போதோ என்னை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும்..ஆனால்..ஒரே ஒரு கேள்வி.. என் நெஞ்சுக் குழியில் நின்று கொண்டு,என் உயிர் இந்த உடலை விட்டுப் பிரியாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.. அந்தக் கேள்வியை இதுவரை உங்களிடம் நான் கேட்டதில்லை. இப்போதாவது கேட்கலாமா..?'' புலவனான அந்தக் கணவன், புரியாமல் அந்தப் புனிதவதியைப் பார்க்க...அந்த மனைவி கேட்டாளாம் இப்படி: ''இதுவரை உங்களிடம் நான் கேட்காத அந்தக் கேள்விக்கு, இப்போதாவது பதில் எனக்குத் தெரிந்து விட்டால்...நிம்மதியாக கண்களை மூடுவேன்.. அந்த நிம்மதியான மரணத்தை எனக்குத் தருவீர்களா.?'' கணவன் மௌனமாக தலையசைத்து சம்மதம் தெரிவிக்க மனைவி தன் நெடுநாள் சந்தேகத்தை கேட்டு விட்டாளாம்.. ''ஒவ்வொரு நாளும் நீங்கள் உணவு அருந்தும்போது ஒரு கொட்டாங்குச்சியில் தண்ணீரும், ஒரு ஊசியும் கொண்டு வரச் சொல்லி, அதைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் சாப்பிடுவீர்கள்... அப்படித்தானே..?'' கணவன் இதற்கும் மௌனமாக தலையசைக்க, மனைவி கேட்டாளாம் ..''இதுவரை அதற்கான காரணத்தை ஒருபோதும் நான் உங்களிடம் கேட்ட தில்லை... காரணம்..கணவன் சொன்னதற்கு மறுபேச்சு பேசி, நான் அறிந்ததில்லை... இப்போது என் வாழ்வின் இறுதி மூச்சில் இருக்கிறேன்... இப்போதாவது சொல்லுங்கள்.. அந்த கொட்டங்கச்சியும், தண்ணீரும் எதற்காக..?'' இதைக் கேட்டுவிட்டு, இதற்கான பதிலை எதிர்பார்த்து அந்த மனைவி, புலவனான கணவன் முகத்தைப் புரியாமல் பார்த்திருக்க அந்தக் கணவன் சொன்னாராம்.. ''அது வேறொன்றும் இல்லை பரிமாறும் போது தவறுதலாக சோற்றுப்பருக்கை கீழே சிந்தி விட்டால், அதை அந்த ஊசியில் குத்தி, கொட்டாங் குச்சியில் உள்ள தண்ணீரில் கழுவி மீண்டும் சோற்றில் கலந்து உண்ணத்தான் அந்தக் கொட்டங்கச்சி நீரும்..ஊசியும்..'' கணவன் பதில் சொல்லியும் மனைவியின் குழப்பம் தீரவில்லை...அவள் கேட்டாள் .. ''ஆனால் ஒருபோதும் நீங்கள் அந்த ஊசியையும், கொட்டாங்கச்சியையும் பயன்படுத்தி நான் பார்த்ததே இல்லையே..?'' மனைவி இப்படிக் கேட்டதும்...குரல் உடைந்து போன கணவன்...குமுறும் அழுகையை அடக்கிக் கொண்டு சொன்னாராம்... ''உண்மைதான்...ஒரு நாளும் நான் அதைப் பயன்படுத்தவில்லை..! ஏனென்றால் ஒரு நாளும் நீ எனக்குப் பரிமாறும்போது, ஒரு சோற்றுப் பருக்கையைக் கூட சிந்தவே இல்லையே....!'' கணவன் பதில் அறிந்த மனைவி.. புன்னகை செய்தாளாம்.... அவ்வளவுதான்....! கண் மூடி விட்டாளாம்..!! நெகிழ்ச்சியோடு நெடு நேரம் நின்ற கணவன் ..அந்தப் புலவன்...கண்ணீரோடு தன் அன்பு மனைவிக்காக உடனே ஒரு கவிதை எழுதினானாம். இதுநாள் வரை தன் வாழ்நாளில் அவன் எழுதியதெல்லாம் ...இரண்டு வரிப் பாடல்கள்...அதில் ஏழே ஏழு வார்த்தைகள்..! அவ்வளவுதான்... அதுதான் அந்தப் புலவன் தன் பாட்டுக்கு ஏற்படுத்திக் கொண்ட பார்முலா..விதி..! இப்போது.... தனது செய்யுள் விதியை...தானே தளர்த்திக் கொண்ட அந்தப் புலவன்... தன் வாழ்வில் முதன் முதலாக, நாலு வரிப் பாட்டு ஒன்றை எழுதினானாம்...அந்த நாலு வரிப் பாடல்:



''அடியிற்கினியாளே அன்புடையாளே
படிசொல் தவறாத பாவாய்- அடிவருடி
பின்தூங்கி முன்னெழும்பும் பேதாய்-
இனிதா(அ)ய் என் தூங்கும் என்கண் இரவு''

ஆம்... இந்த நாலு வரிப் பாடலை எழுதிய அந்தப் புலவர் ..திருவள்ளுவர்....! கணவன் சொல் தட்டாத அந்த கள்ளமற்ற அன்பு மனைவி ..வாசுகி...!

அந்தப் பாடலின் பொருள் : 'அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே! என் சொல்படி நடக்கத் தவறாத பெண்ணே! என் பாதங்களை வருடி தூங்கச் செய்தவளே! பின் தூங்கி முன் எழுபவளே! பேதையே! என் கண்கள் இனி எப்படித்தான் இரவில் தூங்கப் போகிறதோ!''

# SRI PARTHASARATHY SWAMI SABHA (Estd. 1900)

(Address for Communication : 100, T.P. Koil St., Triplicane, Chennai-5)

## 118th YEAR - DANCE FESTIVAL (From 20-1-2018 to 11-3-2018)

## bharat nritya utsav

**at R.K. SWAMY AUDITORIUM (Sir Sivaswamy Kalalaya S.S. School)**
**5, Sundareswarar Street, Mylapore, Chennai – 600 004.**

### Programme Schedule for January 2018

**20-1-2018 ( Saturday)**

4.00 p.m. Bharatanatyam By R. MEGA ( Disciple of Guru Archana Mahesh)
5.45 p.m. Bharatanatyam By ANANYA MANOJ ( Disciple of Guru Srekala Bharath)
7.15 p.m. Bharatanatyam By THEJASWINI VIJAYAKKUMAR (Disciple of Guru Srekala Bharath )

**21-1-2018 ( Sunday)**

4.00 p.m. Bharatanatyam By SMRITI SATHIAMURTHY (a) VIBHA ( Disciple of Guru Archana Mahesh)
5.45 p.m. Bharatanatyam By NIVEDHA SHANKAR (Disciple of Guru Srekala Bharath)
7.15 p.m. Bharatanatyam By KALAIVANI RAJMOHAN ( New Delhi)

**22-1-2018 (Monday )**

5.45 p.m. Bharatanatyam By S. AISHWARYA IYER ( Disciple of Guru Pandanallur Pandian)
7.15 p.m. Kuchipudi By MADHURIMA NARLA ( Hyderabad)

**23-1-2018 (Tuesday )**

5.45 p.m. Mohiniyattam By RASHMI MENON ( Disciple of Guru Kalamandalam Kshemavathy)
7.15 p.m. Bharatanatyam By ASHWINI VISWANATHAN (Disciple of Guru Jayanthi Subramaniam)

**24-1-2018 ( Wednesday)**

5.45 p.m. Bharatanatyam By APOORVA PRADEEP (Disciple of Guru B. Bhanumathi and Guru Sheela Chandrashekar)
7.15 p.m. Bharatanatyam By RADHIKA SHETTY ( Mangalore ) (Disciple of Guru Bragha Bessel,l Guru Rama Vaidyanathan and Padmini Ramachandran)

**25.1.2018 (Thursday)**

5.45 p.m. Bharatanatyam By NIVEDHA HARISH (Disciple of Guru Roja Kannan)
7.15 p.m. Bharatanatyam Group Presentation By Students of SRI GYANA MUDHRA (Disciples of Guru Archana Mahesh)

**26.1.2018 ( Friday )**

4.00 p.m. Bharatanatyam By N. THAILASANTHOSHI (Disciple of Guru Archana Mahesh)
5.45 p.m. Kuchipudi Natyam By Dr. MADHAVI NAMBOODIRI
7.15 p.m. Bharatanatyam By Group Presentation by Students of KALADIKSHA (Disciples of Guru Meenakshi Chitharanjan )

**27.1.2018 ( Saturday )**

4.00 p.m. Bharatanatyam By S. SHRAVANTHY (Disciple of Gurus Madurai R. Muralidharan and Chitra Muralidharan)
5.45 p.m. Bharatanatyam By TEJASWINI NARAYANAN (USA) ( Disciple of Guru A. Lakshnaswamy and Guru Sujatha Mohan)
7.15 p.m. Bharatanatyam Group Presentation by Students of BHARATHA NATYALAYA (Academy of Indian Classical Dance) ( Disciples of Guru Latha Ravi)

**28.1.2018 ( Sunday )**

4.00 p.m. Bharatanatyam By S. ANUSREE (Disciple of Gurus Madurai R. Muralidharan and Chitra Muralidharan)
5.45 p.m. Bharatanatyam By SOUMYA TILAK SESHADRI (USA) (Disciple of Guru Dr. Vijay Madhavan)
7.15 p.m. Bharatanatyam By AMRITHA VARSHINI (Disciple of Guru Lalitha Ganapathy)

**29.1.2018 ( Monday )**

5.45 p.m. Bharatanatyam By SWETHA VENKATESH (Disciple of Guru Sampurna Venkatesh)
7.15 p.m. Bharatanatyam By SATHVIKAA SHANKAR (Disciple of Guru Anitha Guha)

**30.1.2018 ( Tuesday )**

5.45 p.m. Bharatanatyam By RAMYA RAJESH KUMAR (Disciple of Guru Late K.J. Sarasa)
7.15 p.m. Bharatanatyam By GOPUKIRAN and AASHIN KIRAN - Kirans academy of Natya (Disciple of Guru Dhananjayans )

## All Are Welcome


# தெரிந்து கொள்வோம்...

## மதுரை மீனாஷி அம்மன் கோவில் கதை

பல ஆண்டுகள் முன்னால் மாலிக்கபூர் மதுரையை நோக்கிப் படையெடுத்தான்.வரும் வழியெங்கும் இரத்தம், கொலை, கொள்ளை, பலாத்காரம், பெண்களை சிறைப்படுத்துதல், நிறுத்தாமல் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. கோவில்களை இடித்தான். முடியாதவற்றில்



மூர்த்தியை மட்டுமாவது இடிப்பான். பல கோவில்களில் மூர்த்தியை எப்படியாவது காப்பாற்றிவிடுவார்கள் நம் மக்கள். இப்படியாக துவங்கியதுதான் கல்திரை. கர்பக்ருஹதிர்க்கு முன்னால் ஒரு சுவரை எழுப்பி அதற்கு முன் ஒரு மூர்த்தியை பிரதிஷ்டை செய்துவிடுவார்கள். ஆக்கிரமிப்பாளன் வருவான். இதுதான் மூர்த்தி என்று நினைத்து இடிப்பான். இதை கேள்விப்பட்டனர் மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலை சேர்ந்த 5 சிவாச்சாரியார்கள், எப்படியாவது நமது கோவிலை காப்பாற்ற வேண்டும், சுவாமி மீது ஒரு மிலேச்சன் கை வைக்க விடக்கூடாது என்று தங்களுக்குள் சபதம் செய்து கொண்டார்கள். தாம் செய்யும் காரியத்தை நேரம் வரும்வரை யாருக்கும் சொல்வதில்லை என்று சத்தியம் செய்தார்கள். சுவாமிக்கு அபிஷேகமெல்லாம் செய்து முடித்து, கண்ணில் நீருடன், மீண்டும் உன்னை எப்போது காண்போம் சர்வேசா, சுந்தரேசா என்று கதறியபடியே கல் திரை எழுப்பினார்கள். வெளியே மூர்த்தியை பிரதிஷ்டை செய்தார்கள். அசலைப்போலவே நகை, விளக்கு, மாலை, எல்லாம் ஏற்பாடு செய்தார்கள். வந்தான் மாலிக்கபூர். ஆயிரக்கணக்கான பேரை கொன்றான். பல ஆயிரம் பேரை மதம் மாற்றினான். மாட்டு கறியை வாயில் திணித்தான். விக்ரஹத்தை இடித்தான். செல்வங்களை எல்லாம் கொள்ளை கொண்டு போனான். அதன் பின் 48 ஆண்டுகள் கோவிலில் பூஜை இல்லை. தெரிந்து கொள்ளுங்கள் நண்பர்களே, மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலில் 48 ஆண்டுகள் பூஜை கிடையாது. கோவிலே பாழாக இருந்தது. அதன் பின் விஜயநகர சாம்ராஜ்யம் துவங்கியது. முகலாயர்களை துவம்சம் செய்தார்கள். எல்லா கோவில்களையும் புனருத்தாரணம் செய்தார்கள். அப்போது மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலிலும் வேலையை ஆரம்பித்தார்கள். அங்கே இடிந்து கிடந்தது சிவலிங்கம். அம்பாளை காணோம். சரி வேறு ஒரு சிலையை செய்ய சொல்லி உத்தரவு கொடுப்போம் என்று சொன்னார்கள். அப்போது தள்ளாத வயதான ஒருசிவாச்சாரியார் வந்தார். புது விக்ரஹமெல்லாம் வேண்டாம். சுவாமி பத்திரமாக இருக்கிறார் என்றார். என்ன சொல்கிறீர்கள். இதோ இடித்துவிட்டு போயிருக்கிறார்களே என்றனர். இல்லை, இல்லை, இது மூல விக்ரஹமில்லை என்று சொல்லி நடந்ததை சொன்னார். சத்தியம் செய்த 5 பேரில் 4 பேர் இறந்து விட்டார்கள். காலம் வரும்வரை எப்படியாவது நான் இதை சொல்லிவிட்டு சாக வேண்டும் என்று உயிரை கையில் பிடித்துகொண்டு இருக்கிறேன் என்று சொல்லி தாளாத துக்கத்துடனும் மனதில் இருந்த பாரம் இறங்கியதில், நல்லது நடக்கிறதே என்று சந்தோஷத்துடனும் அழுதுகொண்டே சொன்னார். உடனடியாக அந்த மூர்த்தி இருந்த இடத்தின் பின்னே உள்ள சுவற்றை இடிக்க ஆரம்பித்தார்கள். முழுவதும் இடித்து உள்ளே சென்று பார்த்தால்..... உள்ளே 48 ஆண்டுகள் கழித்து எந்த பூஜையும் இல்லாமல், விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுவாமியின் மீது சாற்றிய சந்தன கலபம் ஈரமாக இருந்தது. பூக்கள் வாடாமல் இருந்தன. கர்பக்ருஹத்தில் உள்ளே இருந்து வரும் அந்த வாசம் அப்படியே இருந்தது! 48 ஆண்டுகள் கழித்து எந்த பூஜையும் இல்லாத நிலையில் உள்ளே அணைத்தும் மூடும்போது இருந்தபடியே இருந்தது. திளைத்தனர் பக்தியில் அனைவரும். அனைத்து சோக நிழல்களும் பறந்தன. ஊரே திருவிழா கோலம் பூண்டது இந்த அதிசயத்தை காண. மீண்டும் புது பொலிவுடன் கோவில் திறக்கப்பட்டது. இன்றும் அந்த கோவிலுக்கு போனால் உடைக்கப்பட்ட சிவலிங்கம் ஒரு ஓரமாக துர்க்கை அம்மன் எதிரில் வைக்கப்பட்டுள்ளது. இந்த விவரம் ஒரு பலகையில் எழுதிவைக்கப்பட்டுள்ளது. யாரும் பார்ப்பதில்லை



Super Singer Line up Rare Picture
D.K.Pattammal, Jayalakshmi, M.S.Subbualakshmi, Radha, S.Janaki, L.R.Eswari and Vani Jayaram

**FOR ADVERTISEMENT IN MYLAI EXPRESS CONTACT**
**9840643902 / 9884944452**

TC No.22/1/2009 TNBIL 03141-010609 R.DIS 653/09



# 66-ஆம் ஆண்டு ஸ்ரீ ராதாகிருஷ்ண திருக்கல்யாண மஹோத்சவம் (2017-2018)

## ஸ்ரீ சிருங்கேரி பிரவச்சன மந்திரம் ஆர்.ஏ.புரம் சென்னை-28.






























ஒவ்வொரு வருடமும் பக்தர்கள் பலரும் மகிழும் வண்ணம் ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸனாதன தர்ம வித்யா சமித்தியும், ராஜாஅண்ணாமலைபுரம் பக்த ஜன சபா இணைந்து நடத்தும் இராதா கல்யாண மஹோத்ஸவ வைபவ விழாவும் இந்த ஆண்டு ஜனவரி முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று (ஜனவரி 7) காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை சிருங்கேரி பிரவச்சன மந்திரத்தில் மிகவும் உன்னதமாக நடைபெற்றது. வைபவத்தில் உஞ்ச விருத்தியும், புதுக்கோட்டை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பஜனை மண்டலி பாகவதர்கள் நடத்திய அகண்ட திவ்ய நாம பஜனையும், நாம சங்கீர்த்தனமும் பக்தி பரவசம் பெருக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சென்ற வருடத்தை விட இந்த வருடம் மிகவும் அதிகமான பக்தர்கள் விழாவில் கலந்து கொண்டனர். காலை 10 மணி முதல் பஜனையும் மற்றும் இராதா கல்யாண தம்பதிகள் கொண்டு வந்திருந்த வேஷ்டி, புடவை மற்றும் சீர்வகைகள் பகவானுக்கு சமர்பித்து குழந்தைகள் மகளிர் மற்றும் ஆண்கள் நெல் இடிக்கும் வைபவமும், திருக்கல்யாண மாங்கல்ய தாரணம் மற்றும் கல்யாண நலங்கும் பலரும் வியக்கும் வண்ணம் அற்புதமாக நடைபெற்றது. பகல் 1 மணிக்கு தீபாரதனை முடிந்து வந்திருந்த பக்தர்களுக்கு பிரசாதமும் விநியோகிக்கப்பட்டது. சபாவும் ஆண்டுதோறும் அண்ணாமலைபுரத்தில் வசிக்கும் சீனியர் சிட்டிசன்களை கவுரவிக்கும் விதமாக இவ்வாண்டும் 90 வயதை தாண்டிய தம்பதிகளையும் மற்றும் பல சீனியர் சிட்டிசன்களையும் கவுரவித்தது. கடந்த 12 ஆண்டுகளுக்கு மேல் கல்யாணத்தில் ஆர்வமாக பங்குபெற்ற 97 வயதை தாண்டிய திரு.ஜெயராமசர்மா அவர்களையும் பாராட்டி பரிசுகளை வழங்கியது. 60 ஆண்டுகளுக்கு முன் திரு.வைத்திய சுப்பிரமணி ஐயர் அவர்களால் தொடங்கிய இராதா கல்யாண விழாவும் இந்நாளும் அவரது மகன்கள் திரு.வைத்தியநாதன் மற்றும் திரு.ஜெயராமன் அவர்கள் வைபவத்திற்கு ஆதரவு தருவது அல்லாமல் மகிழ்வுடன் பங்கேற்று விழாவிற்கு மெருகேற்றினர். கடைசியில் சபா நடத்திய திருப்பாவை, விஷ்ணு சஹஸ்ரநாம போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு திரு.ஜெயராமன் மற்றும் சபா நிர்வாகிகள் பரிசினை அளித்து குழந்தைகளை மகிழ்வித்தனர். திரு.ஜெயராமன் அவர்கள் கல்யாண வைபவத்தை சிறப்பாக நடத்திய கோபால கிருஷ்ண பஜனை மண்டலி குழுவினரை கவுரவித்து அவர்களுடன் ஒரு வீடியோவையும் விருப்பமுடன் எடுத்துக் கொண்டார். மேலும் முதன் முறையாக திரு.ஜெயராமன் ஆதரவில் ராதா கல்யாண வைபவம் முழுவதுமாக வீடியோ படம் எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதமும் மற்றும் வயிறு நிறைய மதிய இனிய விருந்தும் வழங்கப்பட்டது.

மேலும் விவரங்களுக்கு :
044/24953368 / 94444 70010.

Owned and Published by K. Ganesh, No.37/17, 14th trust cross street, Mandavelipakkam, Chennai - 600028 and Printed by M.V.Murugeshan at Sree K.R.R. Press, New No.19, Old No.7, Aziz Mulk 2nd Street, Thousandlight, Chennai - 600 006. Editor: K.Ganesh